# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,912 — 1932 ம் ஹூ பங்குனிமீ 18 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

---

### அரசாட்சியாரின் விளம்பரம்.

**1895 ம் ஆண்டின் பிறப்பு இறப்பு பதிவுச் சட்டமும் 1907 ம் ஆண்டின் கலியாணப் பதிவுச்சட்டமும்.**

இலங்கை இராச்சிய மந்திரசபை சம்பந்தமாக 1931 ம் ஆண்டின் ஆலோசனைச் சபையிற் செய்த கட்டளையின் 93 ம் அம்சத்தினால் தம்மீது வைக்கப்பட்ட தத்துவத்தைக்கொண்டு தேசாதிபதி யுத்தமனுரவர்களால் 1895 ம் ஆண்டின் 1 ம் இலக்க பிறப்பு இறப்புப் பதிவுச் சட்டத்தின் 9 ம் பிரிவின்படியும் 1907 ம் ஆண்டின் 19 ம் இலக்க கலியாணப் பதிவுச் சட்டத்தின் 9 ம் பிரிவின் படியும் உண்டாக்கப்பட்ட விதிகள்.

உத்தமனுரவர்கள் கட்டளைப்படி,

பெரிசுந்தரம்.

வேலையாட்கள் காரியங்களினதும்
கைத்தொழில் வர்த்தக விஷயங்களினதும்
பொறுப்பேற்றிருக்கும் மந்திரி.

வேலையாட்கள் காரியங்களினதும்
கைத்தொழில் வர்த்தக விஷயங்களினதும்
பொறுப்பேற்றிருக்கும் மந்திரியவர்கள் கந்தோர்,
கொழும்பு, 1932 ம் ஹூ பங்குனிமீ 3 ந் உ.

பிறப்பு இறப்புப் பதிவு காரியஸ்தர்கள் தங்கள் கடமைகளை நடத்தும் விஷயத்தில் அவர்களுக்கு உதவுமாறு 1895 ம் ஆண்டின் 1 ம் இலக்கச் சட்டத்தின் 9 ம் பிரிவின்படி உண்டாக்கப்பட்ட பிரமாணங்கள்.

### பிறப்பையும் சாப்பிள்ளைப்பிறப்பையும் இறப்பையும் குறித்த பதிவுகள்.

பதிவுகளை எழுதி முடிப்பதற்குமுன்
பிழைகளைத் திருத்துதல்.

*பதிவுகளை எழுதி முடிப்பதற்குமுன் பிழைகளைத் திருத்தும் விதம்.*

1. ஒரு பதிவு காரியஸ்தர் பதிவுசெய்யும் நேரத்திலும் பதிவு எழுதி முடிக்கப்படுவதற்கு முன்னும் ஒரு பிறப்பை, சாபிள்ளை பிறந்ததை அல்லது இறப்பைக் குறித்த ஒரு பதிவில் ஒரு பிழையைத்திருத்த வேண்டியிருக்குமாகில், அவர் அதைப் பின்வரும் விதமாகத் திருத்தவேண்டியதேயன்றி வேறுவகையாகவன்று, அவ்விதமாவது :—

(1) ஒரு சொல்லை எழுத்தை அல்லது இலக்கத்தை வெட்டிவிடும்போதெல்லாம் அச்சொல்லு, எழுத்து அல்லது இலக்கம் இன்னும் வாசிக்கக்கூடியதா யிருக்கத்தக்கதாக ஒரு கீற்றை அதற்கூடாக இழுத்துவிட வேண்டும்.

(2) ஒரு சொல்லை எழுத்தை அல்லது இலக்கத்தைப் புதிதாகச் சேர்க்கும்போதெல்லாம் அதை அடையாளம் போட்டு வரிகளுக்கிடையில் எழுதுவதேயன்றி வேறெழுத்தின்மேல் எழுதிவிடவேனும் எழுதியதை மாற்றிவிடவேனும்படாது.

(3) ஒவ்வொரு வெட்டும் ஒவ்வொரு இடைவரியும் இருக்கும் இடத்தில் பதிவுகாரியஸ்தரும் பதிவிற் கையொப்பம் வைப்பவரும் அல்லது வைப்பவர்களும் தங்கள் பெயர்களின் முதல் எழுத்துகளை யிடுதல் வேண்டும்.

(4) (*a*) திருத்தங்களுக்கு இடப்பட்ட முதலெழுத்துக்கள் ஒரு பதிவிலுள்ள எழுத்துக்களோடு கலவாதபடி தடுப்பதற்காக அம்முதலெழுத்துக்கள் எதிரேயிருக்கும் இடதுகைப்பக்க ஓரத்தில் எழுதப்பட வேண்டும்.

குறிப்பு.—அந்தந்தக் கூட்டுக்குரிய அச்சிடப்பட்ட தலைப்பெயர் நிறைக்கும் இடத்தை முதலெழுத்துக்களை எழுதுவதற்குப் போதிய இடமில்லாதிருக்கும்போதெல்லாம் உபயோகிக்கலாம்.

(*b*) இறந்தவர் ஒருவர் எழுத இயலாதவராயிருக்குமிடத்து அவரை அத்திருத்தத்துக்கு ஒரு கைக்கீறு இடும்படி கேட்டு, பதிவுகாரியஸ்தர் அக்கைக்கீறுக்கு நேர்பின்னுக அத்திறத்தவரது பெயரின் முதலெழுத்துக்களை எழுதிவிட வேண்டும்.

### எழுதி முடிக்கப்பட்ட பதிவுகளிலுள்ள பிழைகளைத் திருத்துதல்.

*பதிவுகளை எழுதி முடித்தபின் கண்டு பிடிக்கப்பட்ட பிழைகள்.*

2. ஒரு பதிவுசெய்து ஒப்பமிடப்பட்டு முடிந்த பின் அதிற் காணப்படும் எந்தப் பிழையும் பின்வரும் பிரமாணங்களின்படியன்றி வேறு விதமாக என்ன காரணத்தின் நிமித்தமும் திருத்தப்படல் ஆகாது.

*பிழைகளின் வகைகள்.*

3. இந்தப் பிரமாணங்களின் நோக்கத்தின் பொருட்டு அப்பிழைகள் பின்வருமாறு வகுக்கப்படுகின்றன:—

(1) லிகிதப் பிழைகள்.
(2) காரியத்தில் அல்லது கருத்திற் பிழைகள்.

*லிகிதப் பிழைகள் என்பதின் பொருள் விளக்கம்.*

4. லிகிதப் பிழைகள் என்பன விவரங்களை எழுதி நிரப்புவதில் அல்லது பதிவுகளுக்குக் கையொப்பமிடுவதில் கவனக் குறைவினால் நேரிட்ட அல்லது அறிவிப்பவரின் அல்லது பதிவுகாரியஸ்தரின் பிழையான விளக்கத்தினால் நேரிட்ட சில பிழைகளையும் இடையறவுகளையும் அடக்கும்.

*பதிவுகாரியஸ்தரால் திருத்தப்பட்டு மாகாணப் பதிவுகாரியஸ்தரால் அல்லது உதவி மாகாணப் பதிவுகாரியஸ்தரால் உறுதிப்படுத்தப்படக்கூடிய லிகிதப் பிழைகள்.*

5. ஒரு பதிவுப் புத்தகத்தில் எழுதி முடிக்கப்பட்ட பதிவெதிலும் காணப்படும் கீழே விரித்துச் சொல்லப்படும் விதமான லிகிதப் பிழைகள் 1 ம் பிரமாணத்தில் விதித்திருக்கும் வண்ணமாகவும் மாகாணப் பதிவுகாரியஸ்தரின் அல்லது உதவி மாகாணப் பதிவுகாரியஸ்தரின் உத்தரவுடனும் சிவப்பு மையினால் திருத்தப்படலாம். ஆனால் அப்படியான திருத்தம் ஒவ்வொன்றுக்கும் பதிவுகாரியஸ்தர் தம் பெயரின் முதலெழுத்துக்களை இடுவதுமன்றி மாகாணப் பதிவுகாரியஸ்தர் அல்லது உதவி மாகாணப் பதிவுகாரியஸ்தரும் அவைகளை உறுதிப்படுத்துதல் வேண்டும். பதிவுகாரியஸ்த் தலைவரின் கந்தோரில் அல்லது மாகாணப் பதிவுகாரியஸ்தரின் அல்லது உதவி மாகாணப் பதிவுகாரியஸ்தரின் கந்தோரில் வரிசையாய்க் கட்டிவைக்கப்படும் எந்தப் பதிவிலும் கண்டுபிடிக்கப்படும் அப்படியான பிழைகள் பதிவுகாரியஸ்த் தலைவரால், ஒரு உதவிப் பதிவுகாரியஸ்த் தலைவரால். அல்லது மாகாணப் பதிவுகாரியஸ்தரால் அல்லது உதவி மாகாணப் பதிவுகாரியஸ்தரால் திருத்தப்படலாம்.

தேதிகள்.—(1) பதிவின் முதலாம் கூட்டில் அல்லது "எப்போது பதியப்பட்டது" என்று தலைப் பெயரிடப்பட்ட கூட்டில் (ஆனாலும் இரு கூடுகளிலும் அல்ல) வருஷம் பிழையாயிருந்தால் அல்லது எழுதப்பட்டிராவிட்டால்.

(2) பதிவின் "எப்போது பதியப்பட்டது" என்று தலைப் பெயரிடப்பட்ட கூட்டில் மாசம் பிழையாயும் முந்திய பதிவிலும் பிந்திய பதிவிலுமிருந்து பிழையைத் திருத்துவது அவசியமென்று தெளிவாயும் இருக்குமாகில்.

*சாவுக்குக் காரணம்.*

வைத்தியன் கொடுத்த நிதர்சன பத்திரத்திலிருந்து சாவுக்குக் காரணம் என்னதென்பதைப் பார்த்தெழுதும்போது விட்ட பிழை அல்லது இடையறவு.

*அறிவிப்பவரின் கையொப்பம்.*

எழுத்துமூலமாகக் கொடுக்கப்பட்ட ஒரு பத்திரத்தின் பேரில் பதியப்பட்ட பிறப்பு அல்லது இறப்புப் பதிவின் 9 ம் கூட்டில் "............................................ பேரில் பதியப்பட்டது" என்பதை எழுதாதுவிடுதல்.

*ஒரு விசாரணைக்காரனின் நிதர்சன பத்திரத்திலிருந்து எடுக்கப்படும் விவரங்கள் அடங்கிய பிரதிகள்.*

ஒரு விசாரணைக்காரனின் நிதர்சன பத்திரத்திலிருந்து எவ்விவரங்களையும் பார்த்தெழுதும்போது விட்ட பிழை அல்லது இடையறவு.

*நியாயசட்டப்படியானபத்திர மொன்றிலிருந்து பார்த்தெழுதப்பட்ட விவரங்கள்*

ஒரு உறுதியுரையில், தோட்ட அறிக்கைப் பத்திரத்தில், நீதவானின் நிதர்சன பத்திரத்தில் அல்லது சத்தியக் கடுதாசியில் அடங்கிய விவரங்களைப் பார்த்தெழுதும்போது விட்ட பிழை அல்லது இடையறவு.

*வேறு விவரங்கள்.*

ஒருவரின் பெயரல்லாத எந்தச் சொல்லையும் எழுத்துக் கூட்டுவதில் மாத்திரம் வரும் பிழை அல்லது எச்சொற்களையும் இடந்தப்பி எழுதுதல் அல்லது தேவையில்லாதபடி திருப்பி எழுதுதல்.

*"வேறு லிகிதப் பிழைகளை"த் திருத்துதல்.*

6. எப்பதிவிலும் காணப்படும் 5 ம் இலக்கத்தைக் கொண்ட இதற்கு நேர்முந்திய பிரமாணத்தில் விவரிக்கப்பட்டன வொழிந்த மற்றைய லிகிதப்பிழைகள் அவ்வண்ணமாகவே திருத்தப்படலாம், ஆனால் அறிவித்தவரை வரப்பண்ணக்கூடிய போதெல்லாம் அவருடைய பெயரின் முதலெழுத்துக்களும் அத்திருத்தங்களுக்கு இடப்படல் வேண்டும்.

*காரியத்தில் அல்லது கருத்திற் பிழை என்பதின் பொருள் விளக்கம்.*

7. காரியத்தில் அல்லது கருத்திற் பிழைகள் என்பது 4 ம் பிரமாணத்தில் சொற்பொருள் விளக்கப்பட்டபடியான லிகிதப்பிழைகளல்லாத சகல பிழைகளையும் இடையறவுகளையும் உளப்படுத்தும்.

*காரியத்தில் அல்லது கருத்திற் பிழைகளைத் திருத்துதல்.*

8. ஒரு பதிவு எழுதி முடிக்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்ட காரியத்தில் அல்லது கருத்திற் பிழைகள் மாகாணப் பதிவுகாரியஸ்தர் அல்லது உதவி மாகாணப் பதிவுகாரியஸ்தர் மூலமாய் பதிவுகாரியஸ்த் தலைவருக்கு அறிவிக்கப்படல் வேண்டும். பதிவுகாரியஸ்த் தலைவரின் கட்டளை பெற்றல்லாமல் அப்பிழைகள் திருத்தப்படக் கூடாது.

கலியாணப் பதிவுகாரியஸ்தர்கள் தங்கள் கடமைகளை நடத்தும் விஷயத்தில் அவர்களுக்கு உதவுமாறு 19 7 ம் ஆண்டின் 19 ம் இலக்கச் சட்டத்தின் 9 ம் பிரிவின்படி உண்டாக்கப்பட்ட பிரமாணங்கள்.

## கலியாணப் பதிவுகள்.

### பதிவுகளை எழுதி முடிப்பதற்குமுன் பிழைகளைத் திருத்துதல்.

*பதிவுகளை எழுதி முடிப்பதற்கு முன் பிழைகளைத் திருத்தும்விதம்.*

1. ஒரு பதிவுகாரியஸ்தர் பதிவு செய்யும் நேரத்திலும் பதிவு எழுதி முடிக்கப்படுவதற்கு முன்னும் ஒரு கலியாணப் பதிவில் ஒரு பிழையைத் திருத்தவேண்டியிருக்குமாகில் அவர் அப்பிழையைப் பின்வரும் விதமாகத் திருத்தவேண்டியதேயன்றி வேறு வகையாகவன்று, அவ்விதமாவது:—

(1) ஒரு சொல்லை, எழுத்தை அல்லது இலக்கத்தை வெட்டிவிடும்போதெல்லாம் அச்சொல்லு, எழுத்து அல்லது இலக்கம் இன்னும் வாசிக்கக்கூடியதா யிருக்கத்தக்கதாக ஒரு கீற்றை அதற்கூடாக இழுத்துவிட வேண்டும்;

(2) ஒரு சொல்லை, எழுத்தை அல்லது இலக்கத்தைப் புதிதாகச் சேர்க்கும்போதெல்லாம் அதை அடையாளம்போட்டு வரிகளுக்கிடையில் எழுதுவதேயன்றி வேறெழுத்தின்மேல் எழுதிவிடவேனும் எழுதியதை மாற்றிவிடவேனும் படாது;

(3) ஒவ்வொரு வெட்டும் ஒவ்வொரு இடைவரியும் இருக்கும் இடத்தில் பதிவுகாரியஸ்தரும் கலியாணம் முடிக்கும் மாப்பிள்ளை பெண்பிள்ளையாகிய இருவரும் தங்கள் பெயர்களின் முதலெழுத்துக்களை யிடுதல் வேண்டும்.

(4) (a) திருத்தங்களுக்கு இடப்பட்ட முதலெழுத்துக்கள் ஒரு பதிவிலுள்ள எழுத்துக்களோடு கலவாதபடி தடுப்பதற்காக அம்முதலெழுத்துக்கள் எதிரேயிருக்கும் இடதுகைப்பக்க ஓரத்தில் எழுதப்பட வேண்டும்.

குறிப்பு.—அந்தந்தக் கூட்டுக்குரிய அச்சிடப்பட்ட தலைப்பெயர் நிறைக்கும் இடத்தை முதலெழுத்துக்களை எழுதுவதற்குப் போதிய இடமில்லாதிருக்கும்போதெல்லாம் உபயோகிக்கலாம்.

(b) இறத்தவர் ஒருவர் எழுத இயலாதவரா யிருக்குமிடத்து அவரை அத்திருத்தத்துக்கு ஒரு கைக்கீறு இடும்படி கேட்டு, பதிவுகாரியஸ்தர் அக்கைக்கீறுக்கு நேர் பின்னாக அத்திறத்தவரது பெயரின் முதலெழுத்துக்களை எழுதிவிடவேண்டும்.

### எழுதி முடிக்கப்பட்ட பதிவுகளிலுள்ள பிழைகளைத் திருத்துதல்.

*கலியாணப் பதிவுகளிலுள்ள லிகிதப் பிழைகள்.*

2. ஒரு பதிவுகாரியஸ்தராற் கொடுக்கப்பட்ட அறிவித்தல் நிதர்சனப் பத்திரத்தைப் பார்த்தெழுதும்போது விடப்பட்டு பதிவு எழுதி முடிக்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்ட லிகிதப் பிழைகள் எவைகளும் இதற்குமுன் 1 ம் பிரமாணத்தில் விதித்திருக்கும்வண்ணமாக சிவப்பு மையினால் திருத்தப்படலாம். ஆனால் மாப்பிள்ளை பெண்பிள்ளையாகிய இருவரையும் வரப்பண்ணக் கூடியபோதெல்லாம் அத்திருத்தத்துக்கு அவர்களும் தங்கள் பெயர்களின் முதலெழுத்துக்களை யிடுதல் வேண்டும்.

*நிதர்சனப்பத்திரங்களிலும் உள்ளனவாகிய கலியாணப் பதிவுகளிலுள்ள பிழைகள்*

3. பதிவுகாரியஸ்தரின் நிதர்சனப் பத்திரத்திலும் உள்ளனவாகிய, ஒரு கலியாணப் பதிவிற் கண்டுபிடிக்கப்படும் வேறெந்தப் பிழைகளும் மாகாணப் பதிவுகாரியஸ்தர் அல்லது உதவி மாகாணப் பதிவுகாரியஸ்தர் மூலமாய் பதிவுகாரியஸ்த் தலைவருக்கு அறிவிக்கப்படல்வேண்டும். பதிவுகாரியஸ்த் தலைவரின் கட்டளை பெற்றல்லாமல் அப்பிழைகள் திருத்தப்படக் கூடாது.

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஆல்-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கொட்டாவில் சுகாதாரச் சங்கத்துக்குரிய மதிவில ரோட்டை அகலிப்பதற்கும் திருத்துவதற்கும் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

### பிரதமபடத்து இல. 20,356. குறிச்சி—பீற்றகோட்டே.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கோங்ககவத்த இறைவரி இலக்கம் 223 | தென்னங்காணி, 7 தென்னையுள்ளது .. | ஜி. ஆர். பொத்தேயு, சிலாபம் | 0 | 0 | 5·2 |
| 2 | கோங்ககவத்த இறைவரி இலக்கம் 222 | தென்னங்காணி, 2 தென்னையுள்ளது .. | டபிள்யு. ஏபிரகாம் கொஸ்தா | 0 | 0 | 2 |
| 3 | ஷை .. | தென்னங்காணி, 1 தென்னையுள்ளது .. | உஸ்வத்தலியனகே யொகான சில்வா | 0 | 0 | 1·5 |
| 4 | கோங்ககவத்த இறைவரி இலக்கம் 220 | தென்னங்காணி, 4 தென்னையும் ஓடு கால் வேய்ந்த ஒரு மண் கற்கூடமும் உள்ளது | விஜயசிங்க ஆராச்சிகே டோன பொடிநோன, விஜயசிங்க ஆராச்சிகே டோன களோநோன பீற்றகொட்டே, விஜயசிங்க ஆராச்சிகே டோன எமிலின, மீதிகன | 0 | 0 | 2·2 |
| 5 | கோங்ககவத்த இறைவரி இலக்கம் 219 | தென்னங்காணி, ஒரு தென்னையும், 6 கமுகுவும், 2 வெலியாத மரமுமுள்ளது | விஜயசிங்க ஆராச்சிகே டோன பொடிநோன | 0 | 0 | 3·1 |
| 6 | கோங்ககவத்த இறைவரி இலக்கம் 218 | தென்னங்காணி, ஒரு தென்னையும் 1 அறமண மரமும் உள்ளது | நாகன்பிற்றகே ஜயசேன 119, ம் கிருன்பாஸ், கொழும்பு | 0 | 0 | 5·1 |
| 7 | கோங்ககவத்த இறைவரி இலக்கம் 217 | தென்னங்காணி, 1 அறமரமும், 3 கமுகுவும் உள்ளது | உஸ்வத்தலியனகே சாள்ஸ் சில்வா | 0 | 0 | 2·5 |
| 8 | கோங்ககவத்த இறைவரி இலக்கம் 21[illegible] | தென்னங்காணி, 4 தென்னையும், 1 அறமரமும், 1 கமுகுவும், கட்டிடக்குளிக் கற்கூடின் பகுதியும் | கதிரருச்சிகே டொன் சைமன் | 0 | 0 | 5·7 |
| 9 | கோங்ககவத்த இறைவரி இல்க்கம் 218 | தோட்டம், (வெறுந்தறை) .. | நாகன்பிற்றகே ஜயசேன 119, ம் கிருன்பாஸ், கொழும்பு | 0 | 0 | 1 |
| 10 | சோங்ககவத்த இறைவரி இலக்கம் 217 | தென்னங்காணி, ஒரு தென்னையும், 1 வாழைஅடியும், 1 கமுகுவும், 1 தொலாம்புமரமும் உள்ளது | உஸ்வத்தேலியனகே சாள்ஸ் சில்வா | 0 | 0 | 1·5 |
| 11 | கோங்ககவத்த இறைவரி இலக்கம் 216 | தென்னங்காணி, 2 தென்னையும், தகரக் கூரையுள்ள கட்டிடக் கற்கூடமும் கட்டிட வாய்க்காலும் உள்ளது | கதிரருச்சிகே டொன்சைமன் | 0 | 0 | 4 |
| 12 | பன்சல்வத்த இறைவரி இலககம் 216A | தென்னங்காணி, 1 தென்னையும், 1 கடுன் மரமும், 1 கத்தா லயிம் மரமும் உள்ளது | கோட்டே ஸ்ரீ ஜயமகாவிகார திறஸ்ரீஸ் | 0 | 0 | 5 |
| 13 | ஷை .. | தோட்டம், 2 பிலாவும் 1, துணுமிடல மரமும் உள்ளது | ஷை .. | 0 | 0 | 5 |
| 14 | ஷை .. | தோட்டம், 1 அமமணமரமும், 1 முனமாள்மரமும் ஓர் மக்கிரோட்டின் பகுதியும் | ஷை .. | 0 | 0 | 4·8 |
| 15 | பள்ளியவத்த இறைவரி இலக்கம் 462, 463 ம் | தென்னங்காணியும் றப்பர் காணியும், 9 தென்னையும், 25 றப்பர் மரமும், 3 மாமரமும், 1 கயுவும், 1 கட்டிடச் சிலுவையும், ஒரு கட்டிடக் குகையின் பகுதியுமுள்ளது | குருஆண்டவர் கொழும்பு .. | 0 | 0 | 39·4 |
| 16 | பன்சாலவத்த இறைவரி இலக்கம் 216A | இடுகாட்டின் பகுதி, 1 கபலமரம் உள்ளது | கோட்டே ஸ்ரீ ஜயமகாவிகார திறஸ்ரீஸ் | 0 | 0 | 5·2 |
| 17 | ஷை .. | தோட்டம், (வெறுங்காணி) .. | ஷை .. | 0 | 0 | 1·1 |
| 19 | ஷை .. | வண்டில்பாதை .. .. | முடிக்குரியது .. | 0 | 0 | 2·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆல்-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1932 ம் ஆல் வைகாசிமாசம் 9 ந தேதியிலன்று 10 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1932 ம் ஆல் பங்குனிமீ 16 ந் உ.

ஈ. எச். ஆர். றெனிசன்,
மேலதிக உதவி அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஹொறனைப் பட்டணத்தில் புதியதெரு ஒன்று போடும்படிக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 20,344 குறிச்சி—ஹொறனை

| தண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம் ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | உடவத்தை (வரி இல. 55) | 50 வயதுக்கு மேற்பட்ட 1 ஈரப்பலாவும், 7 தென்னமரமும், 6–10 வயதான 5 ஈரப்பலாவும், 40 வயதான, 2 பலாவும், 20–30 வயதான, 6 பலாவும் 10–15 வயதான 11 கமுகமரமும், 10 வயதான, 1 யம்புமரமும், 1 சொட்டபோறமரமும், 10 வயதான 1 எம்பிறல்லா மரமும், அடங்கிய தோட்டம் | சிங்கப்பூரில் இருக்கும் டபிள்யு. சோபி ஹாமினையும் டபுள்யு. டி. சைமன் அப்புஹாமியும், ஹொறனையில் வசிக்கும், டபுள்யு. டோனு மேய் நோனு ஹாமினையும், கே. டொன். உவில்லியமும், டபுள்யு. பி. எட்வின். டி. மெல்லும், டபுள்யு. எலிஸ் நோனுவும், டபுள்யு. யொஸ்லின் நோனுவும், டபுள்யு. குணசேகறவும், டபுள்யு. குலப்பாலவும். டபுள்யு. கருேலிஸ் சிஞ்ஞோவும், பாதுக்கையைச்சேர்ந்த நியூகலையிலிருக்கும், டபுள்யு. மெற்ற நோனுவும், ஹல்ருேற்றையிலிருக்கும் டபிள்யு. சதுபுஞ்சி ஹாமினையும், மாவித்தறவிலிருக்கும், எம். கலநோனு ஹாமினையும் மறுபேரும் | 0 | 0 | 37·4 |
| 2 | புஞ்சிகேவத்தை (வரி. இல. 59) | 40 வயதுக்குமேற்பட்ட 1 தென்னமரமும், 1 ஈரப்பலாவும், 12 வயதான 2 ஹால்மரமும், ஒரு கிடங்கும் அடங்கிய தோட்டம் | ஹொறனையிலிருக்கும், எம். யேம்ஸ் அப்புவும் எம். யொகானஹாமியும் எம். புஞ்சிநோனுவும், எம். புஞ்சிகாமியும். சே. டொன் உவில்லியமும் கே. டொன் பபுசிஞ்ஞோவும். என். டொன் டாவித் அப்புவும், எம். எலிசாஹாமியும், எம். பொடிஹாமியும். எம். ஹென்றிக் சிஞ்ஞோவும், எம். பீரிஸ்சிஞ்ஞோவும், எம். புருேலிஸ் அப்புவும், எம். பாபிலிஸ் அப்புவும், எம். அபேயபாலவும், எம். சுத்அப்புவும், எம். மெகிநோனுவும் குன்கோமுவாவிலிருக்கும் எம். நோனுஹாமியும், முன்கமவிலிருக்கும் எம். தொன் கர்மானிசும், எம். யொகானிசும், கன்தப்பான்கொடையிலிருக்கும், ஏச். பி. பெம்பியும், ஏச். பி. பீலிசும், ஏச். பி. பொடிநோனுவும், ஏச். பி. பொடிகாமியும, ஏச். பி. கச்சோநோனுவும் மறுபேரும் | 0 | 0 | 6·3 |
| 3 | புஞ்சிகேவத்தை (வரி இல, 56) | 40 வயதான 2 தென்னமரமும் 4 வயதான 1 எலும்பிச்சையும் அடங்கிய தோட்டம் | கொறனையிலிருக்கும் டபிள்யு. டீ. மேய்நோனு காமினையும், மறுபேரும் | 0 | 0 | 5·8 |
| 4 | புஞ்சிகே வத்தையும் அம்பலமேகேனையும் வரி (இல 60–96) | 40 வயதான 9 தென்மரமும், 1–4 வயதான 8 தென்னம்பிள்ளைகளும் 25 வயதான 1 பலாமரமும், 5 5 வயதான 2 மாமரமும், 10 வயதான 12 றப்பர் மரங்களும் இடுகால் மேயப்பட்ட ஓர் பாதிக் கரத்தைக் கொட்டகையும் ஒரு கிடங்கும் உள்ளான தோட்டம் | கொறனையிலிருக்கும்தொன் மர்தேனிஸ் விஜெஜயமானே | 0 | 0 | 33·1 |
| 5 | — .. | ஒற்றையடிப்பாதை .. | — .. | 0 | 0 | 0 3 |
| 6 | அம்பலமசேனவரி) இல, 97A, 97G, 97H) | 40 வயதான் 1 தென்னமரமுள்ள தென்னந் தோட்டம் | கொறணயிலிருக்கும யு டி. எல். பெரேருவின் மனைவி | 0 | 0 | 6·4 |
| 7 | அம்பலமஏன (வரி இல. 97) | 5 வயதான 1 பட்ட தொம்பமரம் உள்ளான ஓர் பாதித் தென்னந் தோட்டம் | ஹொறனையிலிருக்கும் எமிவொன்சேக்க அபேயக்கோன்ஹாமின | 0 | 0 | 7·5 |
| 8 | அம்பலமஏன (வரி இல. 101) | 25 வயதான 7 தென்..மரம் அடங்கிய தென்னந்தோட்டம் | ஹொறனையிலிருக்கும் எம். டி. பயா சிஞ்ஞோ | 0 | 0 | 7·4 |
| 9 | அம்பலமஏன (வரி இல. 98, 99, 99A, 99B) | 30 வயதான 2 தென்னமரமும் 15 வயதான 1 தென்னமரமும், 1–4 வயதான 4 தென்னம்பிள்ளைகளும், 2 வாழைமரமும், ஓர் கிடங்கும் அடங்கிய தென்னந்தோட்டம் | ஹொறனையிலிருகதும் யி. டி. ஏமிஸ் சிஞ்ஞோ | 0 | 0 | 8·2 |
| 10 | அம்பலமஏன (வரி இல. 103) | 40 வயதான 8 தென்னமரமும், 10 வயதான 1 உகுறுசே மரமும், தரைக்குமேல் மாத்திரம் சீமந்து பூசப்பட்ட ஓர் பாதிக்கிணறும் அடங்கிய தென்னந்தோட்டம் | ஹொறனையிலிருக்கும் டி. ஏ. விஜய மன | 0 | 0 | 24·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஏற்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1932 ம் ௵ சித்திரைமாசம் 15 ந் தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு ஹொறனை வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறை கச்சேரி,
1932 ம் ௵ பங்குனி௴ 14 ௳.

எல். எல். ஹன்றர்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ஸ்ரூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் காலியில் இருக்கும் எத்திலிகொடையில் ஓர் சிங்களப்பள்ளிக்கூடம் கட்ட பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 1,4405. குறிச்சி—எத்திலிகொடை.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | பருத்தற ஓவிற்ற வரிப்பண இல. 475 | வெறுங்காணியும் ரேட்டில் ஒரு பகுதியும் | (1) வெகெல்ல ஆச்சாரிகே திஸ்ஸகாமி டி சில்வா, (2) வெலந்தவே ஆச்சாரிகே லேயிசோகாமி, (3) நவுதுன்னே படல்கே அமரசேன (எல்லாரும் எத்திலிகொட) | 0 0 2·7 |
| 2 | கலேவிஓவிற்றவரிப்பண இல. 475 | ரேட்டில் ஒரு பகுதியும் தோட்டமும், 12 றப்பர் மரமும் (15 வருஷம்), 1 தென்னமரம் (20 வருஷம்) | (1) வெலாந்தவே ஆச்சாரிகே பெசோகாமி, (2) வெலாந்தவே ஆச்சாரிகே லேசோகாமி, (3) வெலாந்தவே ஆச்சாரிகே பேபி நோனா, (4) வெலாந்தவே அச்சாரிகே கல்வினகாமி, (5) வெலிகிந்தபடல்கே தேகிறிஸ் டி சில்வா, (6) உடுவக்க ஆச்சாரிகே சைமன் டி சில்வா, (7) நவுதுன்னேபடல் அமரசேன, (8) தேவநாராயண கல்லிஞ்சிகாமி, (9) யகற்று கொடபடல்கே அர்னோலிஸ் டி சில்வா (எல்லாரும் எத்திலிகொடை) | 0 0 24·2 |
| 3 | கொறக்கஹகொட்டவத்தை வரிப்பண இல. 482 | வெறுங்காணியும் ரேட்டில் ஒரு பகுதியும் | (1) வெகல்ல ஆச்சாரிகே தஸ்சோகாமி டி சில்வா, (2) வெலந்தவே ஆச்சாரிகே பேபிநோனா, (3) கினற்றிகலபடல்கே சார்லிஸ்காமி, (4) கினற்றிகலபடல்கே புஞ்சிகாமி, (5) கினற்றிகலபடல்கே சஞ்சிகாமி, (எல்லாரும் எத்திலிகொடை) | 0 0 0·8 |
| 4 | மகாகொடகேவத்த அல்லது கொடயென்தோட்டம் வரிப்பண இல. 492 | தோட்டம், 4 பாக்குமரமும் (15 வருஷம்) 4 தொங்கமரமும் (15 வருஷம்) | (1) அத்துறெலியேபடல்கே டானியெல் டி சில்வா, (2) அப்துல்லா ஆசிஉம்மா (இரண்டு பேரும் எத்திலிகொடை) | 0 0 2·2 |
| 5 | ஷ .. | தென்னந்தோட்டம், 9 பிலாமரம் 40 வருஷம், 3 டவற்ற மரம் 40 வருஷம், 1 கோன் மரம் 40 வருஷம், 48 தென்ன மரம் 40 வருஷம், 1 மாமரம் 20 வருஷம், 54 பாக்குமரம் 20 வருஷம், 50 தென்னமரம் 20 வருஷம், 2 தோடாம் மரம் 5–10 வருஷம் | (1) வெலந்தவே ஆச்சாரிகே பெசோகாமி, (2) வெலந்தவே ஆச்சாரிகே லேசோகாமி (இரண்டு பேரும் எத்திலிகொட) | 1 0 8·8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1932 ம் ஸ்ரூ வைகாசி மாசம் 2 ந் தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு காலிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடங்கைகளினது தன்மையையும் அவ்வுடங்கைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1932 ம் ஸ்ரூ பங்குனிமீ 12 ந் உ.

ஜே. டீ. பிறவுன்,
அரசாட்சி ஏசண்டு, தெ. மா.

---

1876 ம் ஸ்ரூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் காலியில் இருக்கும் கந்தேவத்தையில் ஒரு தமிழ் பள்ளிக்கூடம் கட்ட பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 14,407. குறிச்சி—கந்தேவத்தை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம் ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | மேஸ்திரிகளாங்கேவத்தை அல்லது தங்ககவத்தை வரிப்பண இல: 72 B | தென்னந்தோட்டம், 36 தென்னமரம் 30 வருஷம, 37 தென்னமரம் 50 வருஷம், 8 தென்னமரம் 10 வருஷம், 9 பாக்கு 10 வருஷம், 1 தோட 10 வருஷம், 1 கிணறு | (1) மொகமது சநீப் சித்தி ரவும்மா, (2) அகம்மது லெப்பைமரக்காயர்முக்கிய பீபி, (3) கபீபுலெப்பைமரக்காயர் பக்கீர் மொகம்மது, மூன்று பேரும் கும்பல் வெல | 0 1 31·9 |
| 2 | வீடு: வரிப்பண இல 73 A | வீடு, மண்சிவர், ஓலையாலும் தகரத்தாலும் வேயப்பட்டது | (1) முதலாந்துண்டுக்குப் போல் (2) சுனேது சடக்கு மொகம்மது, கும்பல்வெல | 0 0 1·3 |
| 3 | வீடு: வரிப்பண இல 73 | ஓலை வீடு, தட்டிச்சிவரும் மண்சிவரும் | (1) முதலாந்துண்டுபோல் (2) அகமது ஜமல் டீன் அலிமா உம்மா, கும்பல்வெல | 0 0 1 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியக்காரர்மூலமாய் 1932 ம் ஆண்டு வைகாசி மாசம் 2 ந் தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு காலிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1932 ம் ஆண்டு பங்குனிமீ 12 ந் உ

ஜே. டீ. பிறவுன்,
உதவி அரசாட்சி ஏசண்டு, தெ. மா.

---

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வளவைஆற்று இடக்கரை நீர்பாய்ச்சலுக்குரிய, வாந்துறுப்பே வாய்க்காலுக்கும், மேற்கிளைவாய்க்காலுக்கும் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 61. அனுபந்தம் 4. குறிச்சி—வளவை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 72A | லந்த .. | .. சேனை | .. ஏ. ஏ. காரிம் என்பவரும் வேறு சிலரும் .. | 0 0 39·1 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1932 ம் ஆண்டு சித்திரை மாசம் 9 ந் தேதியிலன்று காலை 10·30 மணிக்கு அம்பாந்தோட்டைக் கச்சேரியில் என்முன்பாக வெளிபட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

அம்பாந்தோட்டைக் கச்சேரி,
1932 ம் ஆண்டு பங்குனிமீ 9 ந் திகதி.

பீ. சரவணமுத்து,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## காணி நிர்ணய முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரம்.

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
இல. 94 (கண்டி).

இதனோடிணைந்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணியில் அதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும அதில் எப்பங்குக்கேனும் அதில் எச்சோங்கைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1932 ம் ஆண்டு மார்ச் (பங்குனி)மீ 18 ந் தேதியிலிருந்து மூன்று மாசகாலத்துக்குள் இதனடியிற் கையொப்ப மிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்கு மிடத்து 1931 ம் ஆண்டின காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப் படுகின்றது.

1932 ம் ஆண்டு பெப்பிரவரி (மாசி)மீ 3 ந் தேதியிலன்று கண்டிகச்சேரியில் கொடுக்கப்பட்டது.

டபிள்யு. டீ. கொட்சோல்,
உதவி அரசாட்சி ஏசண்டு, கண்டி.

குறிப்பு.—(a) இக்காணியைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் மத்தியமாகாண அரசாட்சி ஏசண்டரிடமும் அதின் அளவைப்படம் (சர்வேயர் ஜெனறல்) கில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணியிலுள்ள வழியுரித்து அக்காணிக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

மத்தியமாகாணம், கண்டி டிஸ்திறிக், உடபளாத்தா டிவிசன் கண்டுகொறபகல கோறளையில் இந்துறுவத்த கிராமத்திலிருப்பதும் பின்சொல்லப்படும் எல்லைக்குள்ளிருப்பதுமான காணித்துண்டு.

வடக்கு : வீயற்றெனிப கிராம எல்லை ;

கிழக்கு : வீயாற்றெனிய லெகுந்தெனிய கிராம எல்லை ;

தெற்கு : 182,610 ம் இலக்க உருமைபடத்தி லுருத்தாடப் படும் காணி.

மேற்கு : முடி உருத்தாடும் தேவால கொம்மனகெலே (பி. ப. 4,561 ல் L777 ம் இலக்க காணித்துண்டு.)

பிரதமபட இல. 8,719.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|
| 1 | தேவாலகெவி .. .. | 1 3 37 |

---

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நொம்பர் 95 (கண்டி).

இதனோடிணைந்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணியில் அதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோங்கைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1932 ம் ஆண்டு (மார்ச்) பங்குனிமீ 18 ந் தேதியிலிருந்து மூன்றுமாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்ய வேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1932 ம் ஆண்டு (பெப்ரவரி) மாசிமீ 3 ந் தேதியிலன்று கண்டிக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

டபிள்யு டீ. கொட்சோல்,
உதவி அரசாட்சி ஏசண்டு, கண்டி.

குறிப்பு —(a) இக்காணியைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் மத்திய மாகாண அரசாட்சி ஏசண்டரிடமும் அளவைகளின் அளவைப் படங்கள் (சர்வேயர் ஜெனறல்) கில அளவைக் காரியகர்த்தரிடமும் பெறறுக்கொள்ளலாம்.

(b) இக்காணியிலுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

857

அட்டவணை.

மத்திய மாகாணம், கண்டி டிஸ்திறிக்கு, உடபலாத்த டிவிசன் கண்டுகாறபகல கோறளையில் லியங்தெனிய கிராமத்திலிருக்கும் பின்சொல்லப்படுங் காணித்துண்டு.

பிரதம படத்து இலக்கம் 8,719

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|
| 2 | தேவாலகெலி .. .. | 0 0 9 |

அதின் எல்லை: வடக்கு-எச். ஜே. சாற்சிலியும் டீ சில்வா சகோதரர்களும் உருத்தாடும் புசத்தலை எஸ்ரேற;

கிழக்கு: லெகுற்தெனிய கிராம எல்லை;

தெற்கு: இங்குறுவத்த கிராம எல்லை;

மேற்கு: ஒறியன் ரீ கொம்பனி லிமிற்றட் உருத்தாடும் ஒறியன் எஸ்ரேற.

---

## 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

### காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
### இலக்கம் 96 (கண்டி).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோங்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1932 ம் ௵ (மார்ச்) பங்குனிமீ 18 ௳ தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்ய வேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1932 ம் ௵ (பெப்பிரவரி) மாசிமீ 4 ௳ தேதியலன்று கண்டி கச்சேரியிற் கொடுக்கப்பட்டது.

டபிள்யு. டீ. கொட்சோல்,
உதவி அரசாட்சி ஏஜன்ற், கண்டி.

குறிப்பு—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் மத்திய மாகாண அரசாட்சி ஏசண்டரிடமும் அவைகளின் அளவைப்படம் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

மத்திய மாகாணம் கண்டி டிஸ்திறிக், உடதும்பற டிவிசன், மெடசியபத்து, தொறலியட கிராமத்திலிருக்கும் பின்சொல்லப்படும் காணித்துண்டுகள்:—

பிரதமபட இல. 8,161.

| துண்டு. | காணியினது பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | மடுகஸ்தென்ன (குருஓயாவோடு சேமித்த நிலம்) .. .. | 1 | 0 | 10 |
| 2 | ஷை .. .. | 1 | 1 | 36 |
| 3 | ஷை ம் அடிப்பாதையும் .. | 3 | 2 | 39 |
| 4 | மடுகஸ்தென .. .. | 39 | 3 | 32 |
| 5 | ஷை (அடிப்பாதையோடு சேமித்த நிலம்) .. .. | 0 | 1 | 5 |
| 6 | மடுகஸ்தென .. .. | 1 | 0 | 34 |
| 7 | ஷை .. | 2 | 1 | 22 |
| 8 | ஷை (அடிப்பாதையோடு சேமித்த நிலம்) .. .. | 0 | 1 | 34 |
| 9 | மடுகஸ்தென .. .. | 43 | 0 | 9 |
| 10 | ஷை (அடிப்பாதையோடு சேமித்த நிலம்) .. | 0 | 2 | 23 |
| 11 | மடுகஸ்தென .. .. | 12 | 1 | 14 |
| 12 | மடுகஸ்தென .. .. | 2 | 3 | 33 |
| 13 | ஷை (அடிப்பாதையோடு சேமித்த நிலம்) .. .. | 0 | 2 | 6 |
| 14 | மடுகஸ்தென .. .. | 1 | 0 | 18 |
| | | 111 | 0 | 33 |

எல்லை: வடக்கு-குருஓயா; கிழக்கு-கெ. றம்மெனிக்கா உருத்தாடும் கஹுவல்கவகேன. பி. எம். அசன் அலி உருத்தாடும் ஓயபகலஎலகேன, வி. முருகேசு உருத்தாடும் வோககாமுலபிற்றியகேன; தெற்கு-அசன் அலி உருத்தாடும் கொங்ககாமுலகேன, முடி உருத்தாடும் கெடிககாயற்றபிற்றியகேனே; மேற்கு-முடி உருத்தாடும் கெடிககாயறறபிற்றியகேன, பீ. புஞ்சிருளை உருத்தாடும் பண்டிசயின்னசேன வி. முருகேசு உருத்தாடும் கஹுககாயற்றஎலகேன, பி. எம். அசனலி உருததாடும் போககாமுலகேன, வி. முருகேசு உருத்தாடும் எகசபோககாமுலபிறறியகேன, பி. வி. இலங்கல உருத்தாடும் கங்ககவகேன.

---

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.